IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 63/2010
Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | புனிதா | Caste | : | |
| Husband Name | : | முத்தப்பா | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of August, 2025.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. பிப்ரவரி 2, 1992 அன்று எனக்கும் என் கணவருக்கும் பதிவு செய்யப்பட்ட திருமணம் ஆகும். எங்களுடையது காதல் கலப்பு திருமணம் ஆகும். என்னுடைய தாய்வீடு வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், மாதனூர் ஊர் ஆகும். என்னிடம் காட்டப்படும் கடந்த 20.09.1995 தேதியிட்ட கிரைய ஆவணம் என் கணவரால் விற்பனை செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், அதில் நான் இரண்டாவதாக சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய கணவருக்கு ஆல்கஹால் (மது) வாங்கி கொடுத்து கையொப்பம் பெற்றுள்ளனர். என்னுடைய கணவர் என்னை கையொப்பம் செய்ய சொன்னார் அதனால் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக வா.சா.2 ன் மூலம் குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி ஆவணமானது பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய திருமணம் பதிவு செய்யப்பட்ட திருமணம் என்றால் சரிதான். பதிவுத்துறையில் பதிவுசெய்யப்பட வேண்டும் என்றால் பதிவாளர் முன்னிலையில் முன் சென்று கையொப்பம் இட வேண்டும் என்ற விவரம்

எனக்கு என் திருமணத்தின் மூலம் ஏற்கனவே தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

3. மேற்படி பி.வா.சா.ஆ.4 லேயே நான்காவது இடது பக்கத்தில் முதலில் உள்ள புனிதா என்னுடைய கையெழுத்துதான் என்று சொன்னால் சரிதான். மேற்படி கையெழுத்தானது பி.வா.சா.ஆ.5 ஆக வா.சா.2 மூலம் குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் என்னால் பதிவுத்துறையின் முன்பு கையெழுத்து போடப்பட்டு தற்போது ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது என்று மறுக்க முடியாது என்று சொன்னால், என் கணவர் சொன்னார் அதனால் கையொப்பம் செய்தேன்.

4. குடி போதையில் இருக்கும் போது பதிவுத்துறையில் உள்ளே பதிவு செய்வதற்கு அனுமதிக்கமாட்டார்கள் என்றாலும் நான் பொய்யாக குடித்து விட்டு ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்று சொல்வது இந்த வழக்கிற்காக என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பதிவு செய்யும் போது என் கணவர் குடித்து இருக்கும் விவரம் பற்றி சார்பதிவாளரிடம் கூறினேனா என்றால் கூறவில்லை, அதுபற்றி அப்போது எனக்கு தெரியவில்லை.

5. கடந்த 07.04.1993 அன்று எனது கணவர் காலஞ்சென்ற முத்தப்பன், முதல் வாதி அவருக்காவும் அவருடைய மைனர் இளைய மகன் கிருஷ்ணன் என்பவருக்காகவும் பாலேக்குப்பம் கிராம சர்வே எண்.124/7, 124/8, 123/5 ஆகிய சர்வே எண்களில் உள்ள நிலத்தை சுப்பிரமணி த/பெ.எத்திராஜ் என்பவருக்கு கிரையம் செய்தார் என்றால் இல்லை. அதேபோல் மேற்படி தேதியிலேயே எனது கணவர் காலஞ்சென்ற முத்தப்பன், முதல் வாதி அவருக்காவும் அவருடைய மைனர் இளைய

மகன் கிருஷ்ணன் என்பவருக்காகவும் பாலேக்குப்பம் கிராம சர்வே எண். 130/6, 132 என்ற சொத்தை மணி த/பெ.முனிசாமி ரெட்டி என்பவருக்கு விற்பனை செய்தார் என்று சொன்னால் எந்த சொத்தையும் விற்பனை செய்யவில்லை. அதுபற்றி எனக்கு தெரியாது.

6. என் கணவர் பெங்களூரில் தனியார் துறையில் டிரைவர் வேலை செய்துவந்தார். நாங்கள் என்னுடைய கணவர், என்னுடைய பிள்ளைகளும் ஒரு குடும்பமாகவும், என்னுடைய மாமனார், மாமியார் மற்றொரு குடும்பமாகவும் தனித்தனி வீட்டில் தனியாக வசித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். என் கணவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

7. என் கணவர் வீட்டில் என்னை மட்டும் தான் சேர்க்கவில்லை என்றாலும் என் கணவர் அவருடைய பெற்றோருடன் சுமூகமாக பேசிக்கொண்டு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் அவருடைய பெற்றோருடன் இறக்கும் வரை பேசவில்லை. முதல் வாதியான என் மாமனார் வா.சா.3 ஜெயவேலு என்பவரிடம் இருந்து பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் என் கணவர் மூன்றாவது சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. காட்பாடிக்கு வரும்போது என்னிடம் சொல்லிவிட்டுத்தான் வருவாரா என்றால் அவர் லாரி ஓட்டுவதால் என்னிடம் எந்த வழியில் செல்கிறேன் அல்லது போகிறேன் விவரங்களை சொல்லமாட்டார். என் மாமனார் வீடு இடம் வாங்கி கட்டிய வீடு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 ல் மேற்படி கிரையம் பெங்களூரில் முதல் வாதி

கட்டும் வீட்டிற்காக முதல் வாதியும் என் கணவரும் சேர்ந்து பிரதிவாதியின் தந்தையிடம் வாங்கிய கடனை பிரதிவாதி ஏற்றுக்கொண்டு இந்த கடனை கட்டிவிட்டு இந்த கடன் போக மீதி கிரையப்பணத்தை பெற்றுக்கொண்டு கிரையப்பத்திரம் எழுதி கொடுப்பதாக கூறியுள்ளதால் என் கணவரும் அவர் தந்தையும் சுமூக உறவில் இல்லை என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. என் கணவர் தேவராஜின் மீது ஏமாற்றி குடியைக்கொடுத்து கிரையம் வாங்கினார் என்ற காரணத்திற்காக அவர் மீது வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. ஆனால் வீட்டில் பணம் கொடுக்கவில்லை என்று புலம்புவார். என் கணவர் இறந்தபின்பு நான் தேவராஜின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. ஏனென்றால் என் மாமியார் என் சொத்தை பிரித்து தரவில்லை. வாதி குடும்பத்தில் வாய்மூலமாக பாகப்பிரிவினை செய்து ஒதுக்கப்பட்ட சொத்தை தான் பி.வா.சா.ஆ.4 முன்னிலைக்கு என் கணவர் வாதிக்கு விற்பனை செய்தார் என்றால் பாகப்பிரிவினை ஏதும் நடைபெறவில்லை.

10. எனது மச்சினர் கிருஷ்ணன் என் கணவர் இறப்பதற்கு முன்பே இறந்து போனார். அவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர். கிருஷ்ணன் இறப்பதற்கு முன்பு வரை பெங்களூரில் தான் வசித்து வந்தார், அவர் இறந்தபின்பு அவர் மனைவி மற்றும் பிள்ளைகள் பெங்களூரில் தான் வசிக்கிறார்கள். மேற்படி கிருஷ்ணன் பி.வா.சா.ஆ.4 குறித்து பிரதிவாதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11. மேற்படி கிருஷ்ணன் பி.வா.சா.ஆ.4 குறித்து ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்று அவரது வாரிசுகளான 13, 14ம் வாதிகளை கேட்டால்தான் தெரியும் என்றால் சரிதான். நான் திருமணம் ஆனது முதல் இன்று வரை பெங்களூரில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரம் 1ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டது என்றும் அது நிராகரிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI